**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**

MCOP No: 14/2022

2024-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன்படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவகாமி | ஜாதி | |
| த.க.பெயர் | பாபு | மதம் | |
| கிராமம் | கர்நாடகா | தொழில் | |
| மாவட்டம் | | வயது | 37 |

**ம.சா. 1 நாள் 17.10.2024**

சாட்சிக்கு தமிழ் பேச மட்டும் தான் தெரியும் என்றும், அவர் கர்நாடகாவை சேர்ந்தவர் என்றும், ஆகவே தமிழ் எழுத படிக்கத் தெரியாது என்றும் கூறினார். சாட்சியின் சாட்சியம் தமிழில் பதிவு செய்து அதை சாட்சிக்கு படித்துக் காண்பித்ததில் அவர் ஒப்புக் கொண்ட பின் கையொப்பம் செய்ய அறிவுறுத்தப்பட்டது.

**முதல் விசாரணை:**

**(சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

ம.சா.1 ஆகிய நான் இம்மனுவின் மனுதாரர். என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

| | | |
|---|---|---|
| 1. | பெருந்துறை காவல் நிலைய கு எண் 91/2021 முதல் தகவல் அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.1 |
| 2. | என் மகள் சந்தியா ராணியின் பிண கூராய்வு அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.2 |
| 3. | சி டி ஸ்கேன் ரிப்போர்ட் அசல் | ம.சா.ஆ.3 |
| 4. | என் மகள் சந்தியாராணியின் இறப்பு சான்று ஆன்லைன் நகல் | ம.சா.ஆ.4 |
| 5. | என் மகள் சந்தியாராணியின் வாரிசு சான்று ஆன்லைன் நகல் | ம.சா.ஆ.5 |
| 6. | என் மகள் சந்தியாராணியின் SSLC Marksheet நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) | ம.சா.ஆ.6 |

மனுவில் கோரியுள்ள பரிகாரம் வழங்கக் கோருகிறேன்.

**<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால ஆமாம். எனவே விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். விபத்து சமயத்தில் என் மகள் இரு சக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து பயணம் செய்தார் என்றால் ஆமாம். என் மகள் பயணம் செய்த வாகனத்தை ஓட்டிய கௌதம் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அந்த வாகனத்திற்கு பதிவு சான்று மற்றும் காப்பீடு இல்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அவருக்கு ஓட்டத் தெரியாமல் திடிரேன்று இடது பக்கத்தில் இருந்து வலது பக்கமாக இரு சக்கர வாகனத்தை திருப்பி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்திற்கு பதிவு சான்று மற்றும் காப்பீடு இல்லை என்று தெரிந்து விடும் என்பதால் தான் மோட்டார் வாகன ஆய்வறிக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்யாமல் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இரு சக்கர வாகன ஓட்டுநர் கௌதம் ராஜ் மீது தான் இறுதியறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த விவரம் தெரிந்துவிடக் கூடும என்பதால் தான் இறுதியறிக்கை தாக்கல் செய்யாமல் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கௌதம் ராஜ் ஐ யோ அந்த வாகத்தின் உரிமையாளரையோ தரப்பினராக சேர்க்காததல் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் மகள் நர்ஸ் படிப்பிற்கு தேர்வு செய்யப்பட்டார் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால ஆமாம். என் மகளுக்கு எந்த வருமானமும் இல்லை என்றால் சரியல்ல, தையல் வேலை செய்து அவர் சம்பாதித்து வந்தார். நான் அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றும், அவர் சம்பாதிக்கவில்லை என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 ம் மனுதாரர்கள் என் மகளை சார்ந்தவர்கள் அல்ல என்றும், அவருடைய வாரிசு அல்ல என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் கௌதம் ராஜ் மைனராக இருந்தார் என்றும், அவர் ஓட்டி சென்ற வாகனத்தில் என் மகன் பயணம் செய்தது விதி மீறல் என்றும், அதனால் இழப்பீடு கோர எனக்கு அறுகதையல்ல என்றால் சரியல்ல. இழப்பீடு நான் கௌதம் ராஜ் இடமும், அந்த வாகனத்தின் உரிமையாளிடமும் தான் கோர முடியும் என்றால் சரியல்ல. கௌதம்

ராஜ் ஓட்டிய வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்பதால் தான் 1 முதல் 3ம் எதிர்மனுதாரர்கள் மீது இந்த வழக்கை வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை அதிகம் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 17.10.24
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS